திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெண்ணுக்கும் அந்தப் பையனுக்கும் விருப்பம் இருந்தது, அவர்களிடையே தொடர்பு இருந்ததெல்லாம் உண்மை. அவர்கள் இருமுறை வீட்டை விட்டுச் சென்று தனியாக அந்தப் பையனுடைய இல்லத்திற்குச் சென்று காவல் நிலையத்திலே இந்தப் பெண்ணின் தாயாரும் தகப்பனாரும் அந்தப் பையனின் தகப்பனாரும் புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. அந்தச் சம்பவம் நடந்த அன்றைக்கும் அந்தப் பெண் வந்து அந்த பஸ் நிலையத்திலே இறங்கியவுடன் அவன் அழைத்துச் சென்று அங்கே அவனுடைய பம்புசெட்டிலே அவர்கள் இரண்டு நாட்கள் தங்கி இருந்திருக்கிறார்கள். குளித்துவிட்டு, ஈரத் துணிகளை அவர்கள் அந்தப் பைப்பிலே வைத்திருந்ததற்கெல்லாம், சாட்சிகள் இருக்கின்றன. அந்தப் பையனுடைய தோட்டத்திற்கு அருகிலே தான்அந்த உடம்பு கிடந்திருக்கின்றது. அதைப் பலர் பார்த்திருக்கின்றார்கள். அப்படி நிறையக் கடிதங்களெல்லாம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தாயாரிடமும் அந்தக் கடிதங்கள் எல்லாம் இருக்கின்றன. அவர்கள் இருவரும் எழுதிக்கொண்ட கடிதங்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே 174 போட்டு தற்கொலை என்று முடிப்பது தவறு. இன்றைக்குச் சட்டத்திலே இப்படிப்பட்ட கொலைகள், பெண்களுக்கு இழைக்கப்படக்கூடாது, கொடுமைகள் வரக்கூடாது என்பதற்காக Setcion 306 Compelled to Commit Suicide என்ற செக்ஷனிலேயாவது போட வேண்டுமென்ற நிலை இருக்கின்றது. அதை வலியுறுத்தி, அந்த செக்ஷனிலாவது போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

10-35 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படி போலீசார் ஒரு தவறான முடிவிற்கு வேண்டுமென்று வந்திருப்பார்களானால், நிச்சயமாக மறு விசாரணை நடத்தி உண்மை மக்களுக்குத் தெளிவாக்கப்படும்.

(ஆ) இராஜபாளையம் வட்டம், வடக்கு மங்கநல்லூர் கிராமத்தில் சலவைத் தொழிலாளர்கள் குடியிருந்து தொழில் செய்யும் இடத்தில் சாராயத் தொழிற்சாலை கட்ட நடவடிக்கை எடுப்பதால் அம் மக்களுக்கு ஏற்படவுள்ள பாதிப்பு குறித்து.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இராஜபாளையம் தாலுக்கா, வடக்கு மங்கநல்லூர் கிராமத்தில் 400-க்கு மேற்பட்ட சலவைத் தொழிலாளர்கள் நீண்டகாலமாக குடும்பமாக தொழில் செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொழிலுக்கான 'டோபி கானா' மாதிரி அந்த இடத்

1990 ஏப்ரல் 26] *[திரு. கே. ரமணி]*

தில் அமைத்து அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 7 ஏக்கர் 73 சென்ட் நிலம். அந்த நிலத்தில் தான் அந்தக் குடும்பங்கள் 'டோபி கானா' அமைத்து தொழில் செய்து வாழ்கிறார்கள்.

அந்த இடத்தில் ஒரு புதிய சாராய வடிப்புத் தொழிற்சாலை உருவாக்க வேண்டுமென்று அரசின் சார்பில் ஏற்பாடு நடப்பதாகச் சொல்லி, அங்கேயிருக்கிற தாசில்தாரும், போலீசாரும் அந்த இடத்தில் தொழிற்சாலை கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிந்து, அந்த மக்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தாங்கள் பரம்பரையாக அனுபவித்து வருகிற அந்த இடத்தில், அதற்கு பக்கத்திலோ அல்லது அதற்குள்ளோ இந்த மாதிரி தொழிற்சாலை வந்தால் அந்தப் பகுதியில் 'என்விரான்மெண்ட்டல் பொல்லூஷன்' சுற்றுச் சூழல் கெட்டு அங்கே அவர்கள் தொழில் செய்ய முடியாத மோசமான நிலை ஏற்படும் என்று வழக்காடி, அவர்களுக்கு தடையுத்தரவு கொடுக்கப்பட்டது. அந்த தடையுத்தரவு வந்த பிறகும், அங்கேயிருக்கிற பெரிய மனிதர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் உட்பட போலீசாருக்கு எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கொடுமையை செய்யக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால், அதைக் கேட்காமல் சம்பந்தப்பட்ட தாசில்தார் போலீசார் உதவியைக் கொண்டு 18–4–1990 தேதியன்று அந்த இடத்திற்குச் சென்று அவர்கள் வெள்ளாவி வைக்கிற பாத்திரங்கள் உட்பட அனைத்தையும் உடைத்து எறிந்து, சுற்றி இருக்கிற கம்பி வேலிகளைப் பிடுங்கி எறிந்து, அந்த இடத்தில் அவர்கள் தொழில் செய்ய முடியாமல் அவர்களை அடித்து, துன்பப்படுத்தி, அவர்கள் தொழில் செய்ய வாய்ப்பில்லாமல், தொழிற்சாலை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர்களிடமிருந்து தந்திகள் வந்திருக்கின்றன. அந்த தந்திகளை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அந்த இடத்தில் 'டோபி கானா' -வில் 400 குடும்பங்கள் வாழ, தொழில் செய்ய வழி செய்யவேண்டும். சாராயத் தொழிற்சாலைக்கு, பக்கத்தில் வேறு எங்காவது ஒரு நல்ல இடத்தைப் பார்த்து அதைக் கொண்டு செல்ல இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஒரு பதிலை நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுகுறித்து திரு. ரமணி அவர்கள் ஏற்கெனவே என்னிடத்தில் அவர்களுக்கு வந்துள்ள தந்திகளை வழங்கினார். நான் அதைப் பற்றி உடனடியாக விசாரித்த அளவில், இத்தகைய தொழிற்சாலைக்கு பல இடங்கள் பல்வேறு பகுதிகளில் டம் பார்க்கப்படுகின்றன. அப்படி ஒரு இடமாக அந்த இடமும் பார்வையிடப்பட்டது. ஆனால் இப்போது அந்தத் தொழிற்சாலையை அங்கே அமைப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை என்பதை திரு. ரமணி அவர்களும், அந்த சலவைத் தொழிலாளர்களும் மகிழ்ச்சி அடையும் வகையில் அறிவித்துக் கொள்கிறேன்.

*திரு. எஸ்.ஆர். இராதா: தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக எனக்கும் தந்தி வந்தது. தேவையில்லாமல் நடவடிக்கை எடுத்து, அவர்களை அப்புறப்படுத்தி, அவர்களுடைய உடைமைகளை எல்லாம் பாழ்படுத்தி இருக்கிறார்கள். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் விசாரித்த வரையில் அப்படி அந்த அளவிற்கு, யாருக்கும் சேதாரம் ஏற்படவில்லை என்று செய்தி வந்திருக்கிறது. அப்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. ரமணி அவர்களும் சொன்னது உண்மையாக இருக்குமானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று பாரதப் பிரதமரிடம் 25-4-1990 ஆம் நாளன்று அளித்த மனுவிலுள்ள வாசகங்கள் பற்றிப் பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் குறித்து.

10-40 மணி.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, காவிரி நதி நீர் பங்கீட்டு விவகாரம் தமிழகத்தினுடைய கவனத்தை ஈர்த்து இருக்கிறது. அது நம்முடைய மொத்தமான கவலைக்குரிய பிரச்சினையாக மாறி இருக்கிறது என்பதை நாம் அறிவோம். நம்மிடையே இந்தப் பிரச்சினை குறித்து ஒரு ஒருமித்த கருத்தும், ஒருங்கிணைந்த அணுகுமுறையும் தேவை என்பதால் யாருக்கும் இதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால், பத்திரிகையில் இன்றைக்கு வந்திருக்கிற சில செய்திகள் நமக்கு கவலையூட்டுவதாக அமைந்திருக்கின்றன. நேற்றையதினம் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து ஒரு மகஜரை சமர்ப்பித்ததைக் குறித்து செய்தி இன்றைக்கு சில பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதுவும் குறிப்பாக இந்து பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி எங்களுக்கு எல்லாம் கவலையூட்டுவதாக அமைந்திருக்கிறது. அதிலே ஒரு வாசகம் The memorandum noted that the agreement on sharing of waters between Tamil Nadu and Karnataka had ended in 1974. 1974-லே இந்த ஒப்பந்தம் முடிவுற்றுவிட்டது என்று ஒரு வாசகம், அந்த மகஜரிலே குறிக்கப்பட்டு இருப்பதாக இன்றைக்கு இந்து பத்திரிகையிலே வந்திருக்கிறது. 1924-லே இந்த ஒப்பந்தம் இரண்டு மாநிலங்களுக்கும் இடையே நிறைவுபடுத்தப்பட்டபோது, 1974-லே 50 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த ஒப்பந்தத்தினுடைய சில ஷரத்துக்கள் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்,